## 21. தலைப்பு 19 – பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்

### 21.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அலுவலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. |
| கணனி, கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. |
| கணக்காய்வு ஐய வினாப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 452(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| கடமைத் தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் 26 ஆவது அனுபந்தம் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| அடியிதழ் சேர் புத்தகங்களினது பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஜீ.ஏ.என் 20 மாதிரிப் படிவம் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| வாகன நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்பக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| குழுக்கூட்ட அறிக்கை | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.3(அ) வழிகாட்டியின் பிரகாரம் கொள்வனவுக் கைநூலின் 2.11.3 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழகாட்டியின் பிரகாரம் கொள்வனவுக் கைநூலின் 5.2.1 | பேணப்பட்டிருக்கவில்லை. |

**21.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்**

அலுவலகத்திற்கு மீளாய்வாண்டின்போது வழங்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும், முன்னைய ஆண்டின்போது வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவிற்கும் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை.

**21.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 100,000 மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆறு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 13 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 21.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 21.4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்க வேண்டியபோதும், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 21.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 21.4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 21.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 21.5 தீர்க்கப்படாத பொறுப்புகள்

அலுவலகத்தால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்குக் குறைந்த தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 1,259,883 ஆகும்.

## 21.6 இணங்காமை

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 94(1) | 441,809 | இரண்டு செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன. |
| | (ii) நிதிப்பிரமாணம் 104(3) | 111,580 | வாகன விபத்து நட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 104(4) | 1,038,364 | நட்டம் ஏற்பட்ட தினம் முதல் 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | | |
| | 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீஎப்/437 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | 706,332 | அரசாங்க பிரிவிற்குரிய சகல நிறுவனங்களும் தமது நிறுவனத்திற்குத் தேவைப்படுகின்ற சகல காப்புறுதித் தேவைகளையும் நேரடியாக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அலுவலகத்தினால் வாகனங்களைக் காப்புறுதிசெய்யும்போது காப்புறுதி முகவர் ஒருவரது சேவை பெறப்பட்டிருந்தது. |

(இ) நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) | 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 1/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | 277,724 | வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலாவிற்காக அமைய மற்றும் இணைந்த படிகள் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ii) | 9(iii) உப பந்தி | 231,437 | வெளிநாட்டுப் பிரயாணத்தின்போது பெறப்பட்ட படிகளிலிருந்து உரித்தற்ற படிகள் மீளச் செலுத்தப்பட்டிருக்க வில்லை. |

## 21.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாக இருந்தன. தெரிவுப் பரிசோதனையின்போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க அரசாங்க செலவின சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியின்படி உரித்தாக வேண்டிய வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்த போதிலும், 06 வாகனங்கள் அந்தப் பதவிக்காக வழங்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக வாடகை அடிப்படையில் வாகனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 04 சந்தர்ப்பங்களின்போது ரூபா 103,460 செலவிடப்பட்டிருந்தது.

## 21.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பமொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

### அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறையினைப் பின்பற்றாமை

அலுவலகத் தேவைக்காக 10,500 புதுவருட வாழ்த்து மடல்களும், 22,000 வெசாக் வாழ்த்து மடல்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசாங்க கொள்வனவு

வழிகாட்டிக் கோவையின் 2:14:1 வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படாது ஒரு நிறுவனத்தால் அனுப்பப்பட்ட கூறு விலையை அடிப்படையாகக் கொண்டு ரூபா 1,673,350 கூட்டுமொத்தச் செலவில் அந்த நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 21.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்றதாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தியின் பிரகாரம் சிக்கனமான வாகனத்தை இனங்காணாது பதிவு செய்யப்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய வாகனமொன்றைப் பழுதுபார்ப்பதற்காக முனனைய ஆண்டுகளிலும் அதிகமான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின்போதும் அதற்காக ரூபா 1,114,320 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 21.10 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அலுவலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அலுவலகத்தினால் சீராக்கப்படாதிருந்த பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடனான தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** |
| --- | --- | --- |
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2013 | 1.6(அ)(i) | விடுமுறை அங்கீகரிக்கப்படாது வெளிநாடு சென்ற பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவர் வெளிநாடு சென்றிருந்த காலத்திற்குரிய முழுமையான சம்பளமும் படிகளும் செலுத்தப்பட்டிருந்தன. |
| | 1.6(அ)(iv) | வருகை, வெளிச் செல்லுகைகளின் உறுதிப்படுத்தலுக்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| 1.6(அ)(iv) | பெண் உத்தியோகத்தர் வெளிநாட்டில் கழித்த காலம் மாதமொன்றிற்கு மேற்பட்டிருந்த போதிலும், வெளிநாடு சென்ற காலப்பகுதிக்கான எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| 1.6(அ)(iv) | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக சீருடைப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| 1.6(அ)(v) | வெளிநாடு சென்றிருந்தபோது அமைய மற்றும் இணைந்த படிகள் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன. |
| 1.6(அ)(vi) | எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகக் கட்டிட நிர்மாணத்தின்போது மதிப்பிடப்பட்ட பெறுமதியை விஞ்சி கொடுப்பனவு செய்யும் போது அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| 1.6(அ)(vii) | கொள்வனவின்போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| 1.7(i) | உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்துள்ள உத்தியோகத்தர்களுக்கும் சபை நடாத்தப்படுகின்ற தினங்களில் போக்குவரத்துக் கஷ்டங்களின் அடிப்படையில் செலுத்தப்படுகின்ற ரூபா 750 படி செலுத்தப்பட்டிருந்தது. |
| 1.7(ii) | வருடாந்த சம்பள ஏற்றத்திற்கு மேலதிகமாக நான்கு சந்தர்ப்பங்களின்போது 10 சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| 1.7(iii) | எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தை பழுதுபார்க்கையில் வாடகை உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக 4 சந்தர்ப்பங்களில் ரூபா 3,150,000 செலுத்தப்பட்டிருந்தது. |

## 21.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 02 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 06 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 21 | 21 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 16 | 01 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 10 | 10 | - |
| | மொத்தம் | 62 | 55 | 07 |

மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 07 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.